<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

OS.72/2017

நாள்.27.09.2021

வ.சா.1 - சகாதேவராஜா

<u>1 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

23வது பிரதிவாதி வங்கியில் தற்போது உள்ள சேமிப்பு கணக்கு 3 பாகஸ்தர்கள் சங்கம் என்ற பெயரில் உள்ளது. நான் அந்த வங்கி கணக்கில் <u>ரூ.17,000/</u>- செலுத்தியபோது அதில் இருப்பு தொகையாக <u>ரூ.32,395.13/</u>- இருந்தது. மேற்படி தொகை 1ம் பிரதிவாதி இருப்பில் வைத்திருந்த தொகை என்றால் சரிதான். அந்த இருப்பு தொகையுடன் நான் <u>ரூ.15,000/-மும்</u> அதன் பின்ன <u>ரூ.500/-ம்</u> செலுத்தினேன் என்றால் சரிதான். அந்த தொகையை நான் மேற்கூறிய கணக்கை கையால்கிறேன் என்பதை காண்பிப்பதற்காக நான் செலுத்தினேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 23ம் பிரதிவாதி வங்கியில் <u>ரூ.2,40,000/-க்கு</u> செல்லாத <u>ரூ.1000/</u>- மற்றும் <u>ரூ.500/</u>- நோட்டுகளை கொண்டு செலுத்தினார் என்பதை காண்பிக்க ஆதாரம் உள்ளதா என்றால் அது என்னிடம் இல்லை. <u>ரூ.47,321/-யை</u> 2ம் பிரதிவாதி எனக்கு செலுத்த வேண்டும் என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ52 - வாசாஆ54 1ம் பிரதிவாதியின் கணக்கை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் தயாரித்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. தற்போது 4வது அயிட்ட சொத்து மட்டும் குத்தகையில் உள்ளது. 5, 6, 7 அயிட்ட சொத்துக்கள் தற்போது குத்தகையில் இல்லை. வழக்கு தாக்கல் செய்த சமயம் 4 - 7 அயிட்ட சொத்துக்கள் முழுவதும் குத்தகையில் இருந்தது. அவ்வாறு தான் அந்த சொத்துக்கள் பல வருடங்களாக அனுபவித்து வரப்படுகிறது. அந்த சொத்துக்களை குத்தகைக்கு விட்டது 1ம் பிரதிவாதி தான். 4வது அயிட்ட சொத்து <u>ரூ.70,000/-த்திற்கும்</u>, 5 வது அயிட்ட சொத்து <u>ரூ.5,000/-</u>த்திற்கும், 6, 7 அயிட்ட சொத்துக்கள் <u>ரூ.40,000/-</u>த்திற்கும் குத்தகை தொகையாக நான் காண்பித்ததற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. மேற்படி

குத்தகை தொகைகளை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சாஆ1ல் கண்டுள்ள சொத்துக்கள் யாவும் தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளது. வா.சாஆ.1ல் உள்ள சர்வே எண்.150ல் 1 ஏக்கர் 66 செண்ட் நிலம் உள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அதே போல் சர்வே எண்.148ல் 1 ஏக்கர் 63 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.145, 146ல் 1 ஏக்கர் 25 செண்ட் கிடையாது. நான் குறிப்பிட்ட சர்வே நம்பர். 150 மற்றும் 148ல் உள்ள சொத்துக்கள் 7 வீட்டு பங்காளிகள் பிரித்து கொண்டார்கள். அந்த 7 வீட்டு பங்காளிகள் யார் என்று வாசாஆ1 பத்திரத்தில் உள்ளது. 23.08.1938ல் முதல் பங்காளி வகையறா ஒரு தீர்மானம் நிறைவேற்றினார் என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் வாசாஆ1 ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். 23.08.1938ம் தேதிய தீர்மானம் 1ம் தபசில் சாவடியில் வைத்து போடப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு தீர்வை கிடையாது. வரி விலக்கு அளிக்கப்பட்ட சொத்து. 1ம் தபசில் சொத்திற்கு பட்டா உள்ளது. பழைய பாளையம் கொட்டிமுக்கலூர் பெரிய சாவடி என்ற பெயரில் பட்டா உள்ளது. நான் சங்கத்தை பதிவு செய்த பின்னர் வாதி பெயருக்கு பட்டாவை மாற்றம் செய்ய முயற்சி செய்தேன். நான் பட்டா மாற்றம் செய்ய இராஜபாளையம் நகராட்சியில் மனு கொடுத்தேன். அதற்கு 1ம் பிரதிவாதி ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் சரிதான். விசாரணையில் இருதரப்பு ஆவணங்களும் ஆஜர்படுத்தினோம். அதன் பின்னர் நான் மனுவில் கோரிய பெயர் மாற்றம் செய்ய மறுப்பு தெரிவித்து மனு நிராகரிக்கப்பட்டது என்றால் தற்போது வரை அந்த மனு மீது எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. 1ம் தபசில் சொத்தில் உள்ள சாவடி கட்டிடம் 1924 முதல் 1928 வரை கட்டப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த சாவடி கட்டுவதற்கு உண்டான கணக்குகள் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். 1938லிருந்து இன்றுவரை தீர்மானங்கள், வரவு, செலவு புத்தகங்கள் 1ம் பிரதிவாதியின் வசம் தான் உள்ளது. முதல்

பங்காளி வகையறாவில் ஆரம்பித்தில் 6 குடும்பத்தார்கள் இருந்தார்கள் என்றால் இல்லை 7 குடும்பத்தார்கள் இருந்தார்கள். தற்பொழுது முதல் பங்காளி வகையறாவில் 250-300 குடும்பத்தார்கள் இருப்பார்கள். 300 குடும்பத்தார்களும் 1ம் பிரதிவாதியின் கீழ் செயல்படுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கீழ் 4 குடும்பங்கள் உள்ளன. முதல் பங்காளி வகையறா தான் முதல் பிரதிவாதியின் பெயரில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் முதல் பங்காளி வகையறாவில் ஒரு உறுப்பினராக இருந்து வந்து பின்னர் 2011ல் மூன்று பங்காளி சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். வாதி சங்கத்தை பதிவு செய்ய போகிறேன் என்று 1ம் பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பினேன். அவ்வாறு அறிவிப்பு அனுப்பியதாக தாவாவில் சொல்லியுள்ளேன். அதற்குரிய கோப்புகள் என்னிடம் உள்ளது. வாதி சங்கத்தை 2011ல் பதிவு செய்த போது அதன் சொத்து விபரங்களை தாக்கல் செய்தேன். அதில் 1ம் தபசில் சொத்தை மட்டும் தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சங்கத்தின் விலாசமாக தாவா 1ம் தபசில் சொத்தை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதே சொத்தில் தான் 1ம் பிரதிவாதியின் சங்க கூட்டங்களும் நடைபெறுகிறது என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்து வாதி சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் எந்த ஆவணமும் கிடையாது. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1ம் தபசில் சொத்தை வாதி சங்கத்தின் விலாசமாக காண்பித்து சங்கத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பழைய கதவிலக்கம் 45க்கு புதிய எண்.50 என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வாதி சங்கத்தை 2011ல் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இராஜபாளையத்தில் கொட்டிமுக்கலூர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் 4 கோட்டைகளாக பிரிந்து உள்ளார்கள் என்றால் சரிதான். 4 கோட்டைக்கும்

தனித்தனி சாவடிகள் உள்ளன. 4 கோட்டைகளில் 3 கோட்டைகளின் பெயர் கள் சிங்கராஜா கோட்டை, சக்கராஜா கோட்டை மற்றும் பச்சைமடம் என்றால் சரிதான். மற்ற கோட்டை பழையபாளையம். இன்றுவரை முதல் மூன்று கோட்டைகள் சங்க பதிவு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் பல வருடங்களாக தனியாக தீர்மானங்கள் போட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த கோட்டையை சேர்ந்தவர்கள் அவரவர் பகுதியில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

வழக்கிறஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்படுகிறது.